**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 01.07.2025**

**O.S. 79/2019**

**பி. வா.சா. 1 - முத்துசாமி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

வழக்கின் வாதிகளை வழக்கிற்கு முன்பு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்கு பின்புதான் வாதிகளை பற்றி தெரியும். நான் புத்தேரியில் வசித்து வருகிறேன். வழக்கு பட்டிகை சொத்து எனது வீட்டில் இருந்து எவ்வளவு கி.மீ. இருக்கும் என்றால் சுமார் 10 கி.மீ இருக்கும். இரவிபுதூரில் எனக்கு சொத்து எதுவும் இருக்கிறதா என்றால் எனக்கு கிடையாது எனது தாத்தா பெயரில் உள்ளது. மேற்படி தாத்தா சொத்தின் சர்வே எண். தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. எனது தாத்தா பெயர் ஆபத்துகாத்த பிள்ளை. எனது தாத்தாவிற்கு மொத்தம் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்றால் தற்போது ஒரு சொத்து உள்ளது. வேறு சொத்து எதுவும் கிடையாது என்றால் தெரியாது. எனது தாத்தா ஆபத்துகாத்த பிள்ளை அப்பாவின் தந்தையாவார்.

நான் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் எனது தாத்தாவிற்கு எத்தனை குழந்தைகள் உண்டு என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம் 4 ஆண்கள் ஒரு பெண். எனது பெயரிலான ஆவணம் என்ன என்றால் விடுதலை பத்திரம் எழுதியுள்ளோம். மேற்படி விடுதலை பத்திரத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்று குறிப்பிட்டு மேற்படி ஆவணத்தில் எழுதியிருக்கிறதா என்றால் தாத்தாவின் சொத்து என்ற முறையில் எழுதியுள்ளது. எனது தாத்தாவிற்கு எப்படி கிடைத்தது என்று மேற்படி ஆவணத்தில் சான்றிட்ட நகலான வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது.

எனது தாத்தாவிற்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்றால் கிரயம் பெற்றார். எனது தாத்தா ஆபத்து காத்த பிள்ளைக்கு சிதம்பரதாணு பிள்ளை என்ற ஒரு மகன் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் எனது எதிர்உரையில் சிதம்பரதாணுபிள்ளைக்கு உரிமை கிடையாது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான் தாத்தாவின் பெயரில் சொத்து இருப்பதால் மகன் அடமானம் வைக்கமுடியாது என்பதால் அவ்வாறு கூறியிருந்தேன். வா.சா.ஆ.4 எழுதுவதற்கு முன்பு முன்பத்திரங்களை எடுத்து பார்த்து வா.சா.ஆ.4 எழுதினேன் என்றால் சரிதான். வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேனா என்றால் சுமார் 10 வருடத்திற்கு மட்டும் எடுத்து பார்த்தேன். மேற்படி பார்த்த வில்லங்கசான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி பார்த்ததாக சொல்லியுள்ள முன்பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சிதம்பர தாணு பிள்ளைக்கு வாரிசுகள் உண்டா என்றால் இல்லை. சிதம்பர தாணுபள்ளையின் மனைவி பெயர் பத்மாவதி. சிதம்பர தாணு பிள்ளை மற்றும் பத்மாவதி ஆகிய இருவரும் காலஞ்சென்று விட்டனர். எந்தவருடம் இறந்தார்கள் என்றால் பெயரியப்பா 1999, பெரியப்பா இறந்தவுடன் அவர் இரண்டாவதாக சுப்பையா பிள்ளை என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்குக்கும் வாரிசுகள் இல்லை, பெரியம்மா எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. சுப்பையா பிள்ளையும் காலஞ்சென்று விட்டார். சுப்பையா பிள்ளை கிருஷ்ணன்கோவில் மேலதெருவை சார்ந்தவர். சுப்பையா பிள்ளை எப்போது இறந்தார் என்று தெரியாது.

எனது பெரியப்பா எங்கு வைத்து இறந்தார் என்றால் ஊருக்கு வெளியே கோவில் குளங்கள் செல்லும் போது இறந்ததாக தகவல் கிடைத்தது. எந்த ஊரில் இறந்தார் என்று

தகவல் கிடைத்தது என்றால் அது பற்றி தெரியாது. என்னிடம் தகவல் தெரிவித்தவர் யார் என்றால் வீரலெட்சுமியின் மூத்த மகளான எனது மதினி விசாலாட்சி மூலம் தெரிந்து கொண்டேன். மேற்படி எனது பெரியப்பா இறந்த தகவல் எனக்கு எந்த வருடம் தெரியும் என்றால் 2014 ல் இடம் வாங்கினோம் சுமார் அதற்கு முன்பு 7,8 வருடத்திற்கு முன்பாக தெரியும். அதுவரையும் எனக்கு பெரியப்பா இறந்த விபரம் தெரியாது என்றால் தெரியாது. வீரலெட்சுமியின் 2ம் மகளின் பெயர் சாந்தம். 3வது பிள்ளை வேலாயுதம், 4வது ஆபத்துகாத்த பிள்ளை என்றால் சரிதான். அவர்களின் அப்பாவின் பெயர் மாதவன் பிள்ளை என்றால் சரிதான். மாதவன் பிள்ளையும் காலஞ்சென்று விட்டார் எந்த வருடம் இறந்தார் என்று தெரியாது. எனது பெரியம்மா சுப்பையா பிள்ளையை எந்த வருடம் திருமணம் செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பெரியம்மாவுக்கும் சுப்பையா பிள்ளைக்கும் விவாகரத்து ஆகவில்லை என்றால் சரிதான்.

விசாலாட்சி எனது பெரியப்பா இறந்ததற்கு சென்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது குடும்பத்தில் இருந்து யாரேனும் எனது பெரியப்பா இறந்ததற்கு சென்றார்களா என்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது பெரியப்பாவின் இறந்த சான்றிதழ், வாரிசு சான்றிதழ் என்னிடம் இல்லை என்றால் சரிதான். எனது பெரியப்பா இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் அவர்கள் குடும்பத்தில் அனைவரும் இறந்து விட்டார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள ஆபத்து காத்த பிள்ளை என்று சொல்லும் நபருக்கும் நான் சொல்லும் ஆபத்துகாத்த பிள்ளைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை நான் வாரிசும் அல்ல என்றால் சரியல்ல. எனது அப்பா பெயர் பகவதி பெருமாள் எனது அப்பாவிற்கு வாரிசுகள் நான் ஒருவர் மட்டும் தான் அப்பா காலஞ்சென்று

விட்டார் எனது அம்மா இருக்கிறார்கள்.

எனது அப்பாவின் இறப்பு சான்றிதழும், வாரிசுசான்றிதழும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் வாரிசு சான்றிதழ் தாக்கல்ள செய்யவில்லை. எனது தாத்தாவிற்கு ராமசாமி என்று முன்றாவதாக மகன் இருக்கிறார் அவரும் காலஞ்சென்று விட்டார். ராமசாமிக்கு ஒரு பெண் வேலம்மாள் உண்டு அவரும் காலஞ்சென்று விட்டார். ராமசாமியின் மனைவி பார்வதியும் காலஞ்சென்று விட்டார். நான் எனது பெயரில் ஆவணங்கள் தயார் செய்த போது வாரிசு சான்றிதழ் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தாவிற்கு செல்லப்பன் பிள்ளை என்ற ஒரு மகனும் உண்டு. அவருக்கு வாரிசுகள் இல்லை. செல்லப்பன் பிள்ளை காலஞ்சென்று விட்டார் அவரது மனைவி மூக்கம்மாள் அவரும் காலஞ்சென்று விட்டார். செல்லப்பன் பிள்ளைக்கு இறப்பு சான்றிதழும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். செல்லப்பன் பிள்ளை எந்த வருடம் எப்போது இறந்ு்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆவணம் எனது பெயரில் எழுதுவதற்கு முன்பே இறந்து விட்டார்.

மேற்படி எனது தாத்தாவின் மகன்களில் இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளது என்றால் இல்லை. கேட்டு விசாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். மேற்படி உறவினர்கள் இறந்த போது நான் சென்றேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அப்போது எனக்கு சிறுவயது. தற்போது எனக்கு 54 வயது. நான் வழக்கிற்காக முழுவதும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை எனது பெயரில் விடுதலை எழுதும் போது நான் வழக்கு பட்டிகை சொத்தை சென்று பார்த்து அளந்து எனது முன்னிலையில் விடுதலை பத்திரம்

எழுதப்பட்டது என்றால் சரிதான். அளப்பதற்கு நான் சர்வேயரை நான் கூட்டிச்சென்றேன். எனது அண்ணன் முறையான சுப்பையனை அழைத்து சென்றேன். அவர் வழக்கு பட்டிகை சொத்தை அளந்து வரைபடம் தயாரித்தாரா அதனை நான் பார்த்தேனா என்றால் சரியாக நியாபகம் இல்லை. மேற்படி வரைபடத்தை எனது பெயரில் விடுதலை எழுதிக்கொடுத்த ஆவணத்துடன் இணைத்துள்ளேன் என்றால் சரிதான்.

எனது பெயரில் விடுதலை ஆவணம் எழுதும் போது வழக்கு பட்டிகை சொத்தில் வீடு இருந்தது என்றால் வீடு இடிந்து தரைமட்டமாக இருந்தது. நான் வழக்கு பட்டிகை சொத்தின் வீட்டை பார்த்ததும் கிடையாது அங்கு நான் சென்றதும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பட்டிகை சொத்தை உண்மையில் அளந்திருந்தால் அதன் கிடப்பு என்னவென்று எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி வழக்க பட்டிகை சொத்தின் பரப்பளவு எவ்வளவு இருக்கும் என்றால் 1.15 சென்ட் இருக்கும். மேற்படி வழக்கு பட்டிகை சொத்தை அளக்கும் போதும் 1.15 சென்ட் சரியாக இருந்தது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை எனக்கு தெரியாது அதனை நான் அளக்கவும் இல்லை அதில் 0.75 சென்ட் தான் இருந்தது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திற்கு தீர்வை எப்போது செலுத்தினேன் என்றால் என் பெயரில் பட்டா எடுக்கும் போது முதன் முதலாக கரம் செலுத்தினேன். பட்டா எப்போது எடுத்தேன் என்றால் எனது பெயரில் விடுதலை ஆவணம் எழுதியதற்கு பின்பாக எடுத்தேன். எனது பெயரில் விடுதலை ஆவணம் எழுதுவதற்கு முன்பு எனது குடும்பத்தாரின் பெயரில் கரம் செலுத்தியுள்ளதா என்றால் நான் பார்க்கவில்லை.

எனக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தில் முன் ஆவணங்கள் குறிப்பிட்டுள்ளதா என்றால் எனது தாத்தா பெயரிலான சொத்து குறித்து ஆவணம் குறித்து

குறிப்பிட்டுள்ளது வேறு எந்த ஆவணமும் குறிப்பிடப்படவில்லை. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் புத்தேரியில் பேன்ஸி ஸ்டோர் வைத்துள்ளேன். செல்லப்பன் பிள்ளை, ராமசாமிபிள்ளை இருவரும் எங்கு தாமசம் எங்கு தாமசம் என்றால் இரவிபுதூரில் தான் தாமசம் கிழக்கு பக்கம் 100 அடிக்குள்ளாக வசித்து வருகின்றனர். ராமசாமியின் பிள்ளையின் மகள் வேலம்மாள் நாகர்கோவிலில் தாமசம். அவர்கள் தாமசித்த சொத்துக்கள் தற்போதும் இருக்கிறதா என்றால் வாடகைக்கு இருந்தார்கள்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**